# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்
## 2021 – 2022
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 10

சுட்டெண்:.............................................................

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இமயத்தில் விற்கொடி பொறித்தவன்

அ) கணைக்கால் இரும்பொறை ☐ ஆ) இராசராசசோழன் ☐

இ) நெடுஞ்சேரலாதன் ☐ ஈ) நெடுஞ்செழியன் ☐

2. இசைக்குல ஆண்

அ) பாடினி ☐ ஆ) பாணன் ☐

இ) கூத்தர் ☐ ஈ) விறலியர் ☐

3. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

அ) 20 ☐ ஆ) 147 ☐

இ) 18 ☐ ஈ) 100 ☐

4. விடாமுயற்சி என்னும் கருத்தை விளக்கும் பழமொழி

அ) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். ☐

ஆ) ஆனைக்கும் அடி சறுக்கும். ☐

இ) தன்வினை தன்னைச் சுடும். ☐

ஈ) ஆழமறியாமல் காலை விடாதே. ☐

5. 'ஆ' என்னும் ஓர் எழுத்துச் சொல் குறிப்பது

அ) பெண்மாட்டை ☐ ஆ) இலையானை ☐

இ) இறைச்சியை ☐ ஈ) அம்பை ☐

6. உயர்வு என்பதன் எதிர்ச்சொல்

அ) தாழ்வு ☐ ஆ) முயற்சி ☐

இ) ஒற்றுமை ☐ ஈ) அண்மை ☐

7. கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தில் இருந்து சிதறிய துண்டுகளே ______________ ஆசிய நாடுகளாகும்.

அ) வடகிழக்கு ☐ ஆ) தென்கிழக்கு ☐
இ) வடமேற்கு ☐ ஈ) தென்மேற்கு ☐

8. சிறப்புக்காரணம் கருதி ஒரு சொல்லையோ தொடரையோ குறித்துக்காட்டுவது

அ) ஒற்றைமேற்கோட்குறி ☐ ஆ) வியப்புக்குறி ☐
இ) இரட்டைமேற்கோட்குறி ☐ ஈ) வினாக்குறி ☐

9. முதற்கழகம் அமைந்த இடம்

அ) தஞ்சாவூர் ☐ ஆ) தென்மதுரை ☐
இ) திருப்பூர் ☐ ஈ) கபாடபுரம் ☐

10. நாங்கள் எந்த வேலையானாலும் அரைகுறையாகச் செய்யக் கூடாது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள அரைகுறை என்ற சொல்

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐
இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

11. தண்மை என்பது

அ) நறுமணம் ☐ ஆ) குளிர்மை ☐
இ) அழகு ☐ ஈ) ஓசை ☐

12. இலக்கணவகையால் சொற்கள் ______________ வகைப்படும்.

அ) 2 ☐ ஆ) 6 ☐
இ) 4 ☐ ஈ) 8 ☐

13. மா என்று குறிப்பிடப்படும் விலங்கு

அ) யானை ☐ ஆ) குதிரை ☐
இ) மாடு ☐ ஈ) புலி ☐

14. வளைந்த தன் செங்கோலை உயிர்கொடுத்து நிமிர்த்தியவன்

அ) கரிகாற்சோழன் ☐ ஆ) பாண்டியமன்னன் ☐
இ) சேரன் செங்குட்டுவன் ☐ ஈ) இமயவரம்பன் ☐

15. வஞ்சியிலே செலவு பற்றிப் பறையறைக. ____________ ஒற்றர் வஞ்சி நகரிலே சுற்றித்திரிகின்றனர்.

அ) எனவே ☐ ஆ) ஏனென்றால் ☐
இ) ஆனால் ☐ ஈ) ஆகையால் ☐

16. தேவநேயப்பாவாணரது இயற்பெயர்

அ) மயில்வாகனன் ☐ ஆ) வரதன் ☐
இ) சேவியர் ☐ ஈ) தேவநேசன் ☐

17. முகவுரை, முடிவுரை என்பன இடம்பெறுவது

அ) இசையில் ☐ ஆ) நாடகத்தில் ☐
இ) கவிதையில் ☐ ஈ) கட்டுரையில் ☐

18. அக்கா வற்றல் உண்டாள் என்பது

அ) தொழிலாகுபெயர் ☐ ஆ) பொருளாகுபெயர் ☐
இ) சினையாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

19. அத்து என்பது

அ) சாரியை ☐ ஆ) விகுதி ☐

இ) பகுதி ☐ ஈ) சந்தி ☐

20. கிளி பேசும். ஆந்தை

அ) அலறும் ☐ ஆ) கூவும் ☐

இ) கரையும் ☐ ஈ) கத்தும் ☐

21. காடுகளில் பென்னம்பெரிய மரங்களைக் காணலாம்.

இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ) மரங்களை ☐ ஆ) காணலாம் ☐

இ) காடுகளில் ☐ ஈ) பென்னம் பெரிய ☐

22. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வட்டம் ☐ ஆ) கனி ☐

இ) மாடு ☐ ஈ) தை ☐

23. வடவரின் பழிப்புச் சொல் கேட்டுக் கொதித்தெழுந்த மன்னன்

அ) அதியர்மான் ☐ ஆ) செங்குட்டுவன் ☐

இ) பாரி ☐ ஈ) ஓரி ☐

24. சித்தப்பா என்ற பேச்சு வழக்குச் சொல்லைச் செவ்வழக்காக மாற்றினால்

அ) சிற்த்தப்பா ☐ ஆ) சித்றப்பா ☐

இ) சிற்றப்பா ☐ ஈ) சின்னப்பா ☐

25. பின்வருவனவற்றுள் இடையின மெய்யெழுத்து

அ) ம் ☐ ஆ) ஞ் ☐
இ) ப் ☐ ஈ) ர் ☐

26. பன்னாட்டு தாய்மொழி நாள் ________________ கொண்டாடப்படுகிறது.

அ) பெப்ரவரி 21 ☐ ஆ) ஆகத்து 21 ☐
இ) சனவரி 21 ☐ ஈ) யூன் 21 ☐

27. மருதநிலத்தில் கொண்டல்கள் எனக் கூறப்படுபவை

அ) வண்டுகள் ☐ ஆ) குவளைகள் ☐
இ) முகில்கள் ☐ ஈ) மயில்கள் ☐

28. கரைந்தன என்பது

அ) ஆண்பால் ☐ ஆ) பலவின்பால் ☐
இ) பலர்பால் ☐ ஈ) பெண்பால் ☐

29. ஆகா! இந்த மலர்கள் எவ்வளவு அழகாக உள்ளன. இச்சொல்லியம்

அ) வியப்புச் சொல்லியம் ☐ ஆ) வினாச்சொல்லியம் ☐
இ) கூற்றுச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

30. தமிழ்மொழிவரலாறு, வடமொழிவரலாறு என்ற நூல்களை எழுதியவர்

அ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ) கார்டுவெல் ☐
இ) வீரமாமுனிவர் ☐ ஈ) தேவநேயப்பாவாணர் ☐

புள்ளிகள் 30



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தாய் மண்ணுக்காகப் போராடி தம் உயிர்களை ஈகம் செய்தவர்களை மாவீரர்கள் என்று அழைப்போம். மாவீரர்கள் மண்ணில் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகின்றனர். மாவீரர்கள் இறக்கும் போது அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறுவதில்லை. மாறாக வீரச்சாவடைந்து விட்டார்கள் என்றே அறிவிப்பர். அவ்வாறு வீரச்சாவடைந்தவர்களின் உடலினை பிணம் என்றோ சடலம் என்றோ அழைப்பதில்லை. அவர்கள் தம் விடுதலைக்காகப் போராடியவர்கள் என்பதால் போரில் இறந்த வீரர்களை மாவீரர்கள் என்றும் அவர்களின் உடல்களை வித்துடல்கள் என்றும் அழைத்தனர். அவ்வித்துடல்கள் புதைக்கப்படும் குழிகள் விதைகுழிகள் என்று அழைக்கப்பட்டன. அங்கு புதைக்கப்படுதல் என்னும் சொல் கையாளப்படவில்லை. மாறாக விதைக்கப்படுதல் என்னும் சொல்லே கையாளப்பட்டது. அவர்களின் வித்துடல்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகள் பேழைகள் என்று அழைக்கப்பட்டன. குழிகளில் வித்துடல்கள் இடப்பட்ட பின்னர் அவற்றினைச் சுற்றிக் கல்லறைகள் கட்டப்படும். அவ்வாறு பெருமளவில் கல்லறைகள் கொண்ட இடம் துயிலுமில்லம் என்று அழைக்கப்பட்டது. இத்துயிலுமில்லங்களில் வித்துடல்கள் கிடைக்காதோருக்காக நினைவுக்கற்கள் நாட்டப்பட்டிருந்தன. அவை அவர்களைக் குறித்த தகவல்களையும் நினைவுகளையும் தாங்கி நிற்கின்றன.

1. வித்துடல்கள் கிடைக்காதோருக்காக எவை நாட்டப்பட்டிருந்தன?

2. மாவீரர்கள் என்று அழைக்கப்படுவர் யாவர்?

3. வீரச்சாவடைந்தவர்களின் உடலினை எவ்வாறு அழைத்தனர்?

4. வித்துடல்கள் இடப்பட்ட பின்னர் அவற்றைச் சுற்றி எவை கட்டப்படும்?

5. நினைவுக்கற்கள் எவற்றைத் தாங்கி நிற்கின்றன?

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இமயத்தில் எடுத்த கல்லைத் தமிழகம் வரை சுமந்து வந்தவர் யாவர்?

______________________________

2. கேட்டலும் பார்த்தலும் இணைந்த ஊடகப் பொறி எது?

______________________________

3. சுவாமி வேதாசலம் என்பவரின் தமிழ்ப் பெயர் என்ன?

______________________________

4. ''மறைந்த கண்ணகி ஒரு கற்பின் தெய்வம். நாம் நாடடைந்து அவளுக்குப் படிமம் எடுத்துக் கடவுள் மங்கலம் செய்து வழிபடவேண்டும்'' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

______________________________

______________________________

5. தேவநேயப்பாவாணர் எத்திட்டத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தார்?

______________________________

______________________________

6. இலெமூரியாக் கண்டத்தின் பழந்தமிழ்ப் பெயர் என்ன?

______________________________

7. 'பூவார் சோலை மயிலால' என்ற பாடலைப் பாடியவர் யார்?

______________________________

புள்ளிகள் 10

**4. தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி கவிதையை முழுமையாக்குக.**

## மறத்தமிழன்

| | | |
|---|---|---|
| வாங்கமாட்டான் | தூங்க | காக்க |
| நினைப்பான் | தமிழுக்கு | |

பழந்தமிழ் மாண்பினை
பதியமிட நினைப்பவன்
விழிகளால் ________________ மாட்டான் - அவன்
வெளிமூச்சை வாங்க மாட்டான்

அழியாத ________________
அறிவியல் கலை சேர்க்க
மொழிக்கடன் ________________ - அவன்
பழிக்கடன் தாங்க மாட்டான்

மானத்தைச் சுமப்பவன்
வானத்தைச் சுமப்பவன்
மறத்தமிழ் ________________ அஞ்சான்! - அவன்
மற்றொருவர் மடியில் துஞ்சான்

அழகு தமிழ் அவனியில்
அரங்கேற ________________
மழைமுகிலாய்க் கரைந்து போகான்! - அவன்
மண்பார்க்கும் முன்னம் சாகான்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றின் மாத்திரைகளைத் தருக.

    குற்றெழுத்து ______________

    நெட்டெழுத்து ______________

    மெய்யெழுத்து ______________

2. பிறவினைச் சொற்களைத் தன்வினைச் சொற்களாக மாற்றி எழுதுக.

    1. கட்டுவித்தான் ______________
    2. காண்பிவித்தாள் ______________
    3. செய்வித்தேன் ______________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

    தொடர்மொழி ______________

    பொதுமொழி ______________

    தனிமொழி ______________

4. செயப்படுபொருள் குன்றாத சொல்லியங்கள் இரண்டு தருக.

    ______________

    ______________

5. மதிமுகம், தேன்தமிழ் ஆகிய உவமையணிகளின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

| | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| மதிமுகம் | ______ | ______ | ______ |
| தேன்தமிழ் | ______ | ______ | ______ |

புள்ளிகள் 15

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.

1. பெருங்கற்காலத்திற்கு முன்னரே இலங்கையில் __________________ மக்கள் வாழ்ந்தனர்.
( நாகரிக, நாகறிக )

2. சிங்களப் படைகளின் வெறியாட்டத்திற்கு அஞ்சி மக்கள் ஏதிலிகளாக __________________.
( வெலியேறினர், வெளியேறினர் )

3. சங்கிலியன் யாழ்ப்பாண __________________ இறுதியாக ஆண்டான்.
( அரையத்தை, அறையத்தை )

4. விபுலாநந்த அடிகளார் இசைத்தமிழுக்கு __________________ ஆற்றினார்.
( அரும்பனி, அரும்பணி )

5. மரத்தில் பழங்கள் __________________ பறவைகள் வந்தன.
( பழுத்ததால், பலுத்ததால் )

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ ஊடகங்களில் தமிழ்

✸ தேவநேயப்பாவாணர்

✸ மழை

- மழை எவ்வாறு உருவாகின்றது?
- காலநிலையில் ஏற்படும் மாற்றம்
- மழையினால் கிடைக்கும் நன்மைகள், தீமைகள்

புள்ளிகள் 20

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC